சாட்சிய வாக்குமூலம்

(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)

முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்

அமர்வு வழக்கு எண்.102/017

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.-15வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 1,2 எதிரிகள் ஆஜர்.3ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | புவிதா | மாவட்டம் | : |
| க/பெ.பெயர் | : | ரமணன் | தொழில் | : |
| கிராமம் | : | | வயது | : |
| வட்டம் | : | | | |

<u>**முதல் விசாரணை:**</u>

1. நான் தற்போது கோயம்புத்தூரில் உள்ள அரசு மருத்துவகல்லூரி,மருத்துவமனை மற்றும் இ.எஸ்.ஐ. மருத்துவமனை துணை முதல்வராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2014ம் வருடம் அரசு மருத்துவமனை கல்லூரியில் கோவை உதவி பேராசியராக பணிபுரிந்த போது ஈரோடு வடக்கு காவல் நிலைய குற்ற எண்.340/2014 வழக்கில் சம்மந்தப்பட்ட அருண்ராம் என்பவரின் பிரேதத்தை ஈரோடு அரசு பொது மருத்துவமனையில் சடலகூராய்பு செய்த போது மருத்துவரால் பிரேதத்தின் கழுத்தை சுற்றியுள்ள திசுக்களுடன் உள்ள தோல் பகுதியை ஆய்வு செய்வதற்காக எங்களது துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

2. நான் அதனை பெற்று முறையாக ஆய்வு செய்து பார்த்ததில் தோலின் மேல் பகுதி (Epidermis) உள்ள பகுதி (dermis) மற்றும் திசுக்கள் (Subcutaneous tissues) ரத்தநாளங்கள் கலங்கி காணப்பட்டது. இது பற்றி 28.07.2014

குறிப்பிடப்பட்டுள்ள Histo Pathological reportல் multiple sections studied show epidermis, dermis and Subcutaneous tissues congested blood vessels என்று என்னால் மருத்துவ கருத்துரை என்னால் வழங்கப்பட்டது. மேற்கண்ட அறிக்கை அ.த.சா.ஆ.9 ஆக குறிப்பிடப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களை அழைத்து அவர்கள் ஆஜர் ஆகவில்லை என்பதால் எனவே குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்ற காரணத்தினால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது.